★ தகர்ந்த கட்டிடங்கள், தரிசான வயல்கள், காலியான களஞ்சியங்கள்

# மயானமாகக் காட்சி தரும் மாங்குளம்


பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-00

# முரசொலி

முரசு 05 ஒலி 05 பிரமோதூத கார்த்திகை 16 (02-12-1990) ஞாயிறு


போருக்குப்பின் மாங்குளம் சுடுகாடாகக் காட்சி தருகிறது. கண்ணுக்கு எட்டிய தூரம்வரை நிமிர்ந்து நிற்கும் கட்டிடங்கள் எதுவும் தென்படவில்லை. முகாமைச் சுற்றியுள்ள வயல் நிலங்கள் தரிசாக கிடக்கின்றன. அலுவலக கட்டிட இடிபாடுகளுக்கு இடையில் தளபாடங்களும், ஆவணங்களும் சிந்திக்கிடக்கின்றன. மாங்குளம் நகர் வெறிச்சோடிக்கிடக்கிறது. இடையிடையே தொலைவில் கேட்கும் துப்பாக்கிச் சூட்டு சத்தங்கள் அடிக்கடி தாளப் பறந்து நோட்டமிடும் ஹெலிக்கப்டர்கள் இவையே போர் நடந்து முடிந்த மாங்குளப்பகுதியில் எமது செய்தியாளர் அவதானித்தவை. முகாமுக்கு அருகில் இருந்த உணவுக்களஞ்சியங்கள் காலியாக காட்சியளிக்கின்றன. அங்கிருந்த உணவுப் பொருட்கள் கடந்த ஜூனில் போர் மூண்டதையடுத்து இராணுவம் பயன்படுத்தியதாக தெரியவருகிறது. முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வீதிகளிலும் மிதி, தரைக்கண்ணி 04ஆம் பக்கம் பார்க்க

## திருநெல்வேலி, அளவெட்டி பகுதிகளில்

# ஊரடங்கை நீக்கியதும் விமானத் தாக்குதல்!

### பாதசாரி, வயோதிப மாது பலி

கடந்த பத்து நாட்களாக அமுலிலிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை நீக்கப்பட்ட ஒரு சில மணி நேரத்தில் திருநெல்வேலி, அளவெட்டி ஆகிய இடங்களை ஸ்ரீலங்கா விமானப்படை குண்டு வீசித் தாக்கியது.

திருநெல்வேலி, கொக்குவில் வீதியில் நேற்றுக்காலை 10 மணியளவில் இரண்டு பொம்மர்கள குண்டுகளை வீசியதால் வீதியில் சென்ற மண்ணெண்ணெய் வியாபாரி ஒருவர் ஸ்தலத்தில் பலியானார்.

அதே வீதியிலுள்ள, எஸ். டாஸ், பரராஜசேகரம் லீலாவதி, கே. சதாசிவம், கு. மோகன், ஆகியோரது வீடுகளும் சேதமடைந்துள்ளன.

நேற்றுப் பகல் 11-30 மணியளவில் அளவெட்டியில் குண்டுவீச்சு விமானம் ஒன்றினால் இரு குண்டுகள் வீசப்பட்டன.

ஒருகுண்டுதண்ணீர்த்தாங்கி ஒன்றின் மீதுவிழுந்து அதனை முற்றாகச் சேதமாக்கியது.

இரண்டாவது தாக்குதலால் பொன்னம்பலம் என்பவரின் வீடு சேதமானதுடன், முற்றத்தில் நின்ற சிவபாதம் விசாலாட்சி (70) என்ற வயோதிபப் பெண் ஸ்தலத்தில் பலியானார். (48, 33, ப-33)

## தவறணை மீது குண்டு வீச்சு வயோதிபர் பலி; நால்வர் காயம்

கிளிநொச்சியில் உள்ள வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதியில் குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல் நடாத்தியது.

இவ்வாறு வீசப்பட்ட குண்டுகள் கள்ளுத் தவறணையில் விழுந்ததில் அங்கு நின்ற ஒருவர் மரணமானார், 4 பேர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சண்முகம் (65) இராமநாதபுரம் —04 ஆம் பக்கம் பார்க்க

## விடுதலை வேதங்கள் அறிமுக விழா

விடுதலைப் புலிகள் கலை, கலாசாரப் பிரிவினர் தமிழீழக் கலைஞர்களுடன் இணைந்து உருவாக்கிய 'வேங்கைகளின் விடுதலை வேதங்கள்' என்ற பாடல் ஒலிப்பதிவு நாடாவின் அறிமுக விழா இன்று காலை 10 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

விடுதலைப் புலிகள் கலை, கலாசாரப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரையின் தலைமையில் நிகழும் இவ் விழாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர்கள் சிறப்புரையாற்றுகின்றனர்.

## இலங்கை வங்கியில் ஒய்வூதியம்

இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி முதல் 11 மணிவரை ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கி பிரதான கிளையில் செப்ரம்பர் மாதத்துக்குரிய சிவில் ஒய்வூதியம், ஆடி, ஆவணி மாத ரயில்வே ஒய்வூதியம் பணமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (71)

## செயலகத்தில் முக்கிய கூட்டம்

யாழ் மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் கூட்டம் நாளை திங்கள் காலை 10 மணிக்கு யாழ் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

—04 ஆம் பக்கம் பார்க்க

# சேமமடுவில் கடும் மோதல் முன்னேறும் முயற்சி தோல்வி

வவுனியா மாவட்டத்தில் உள்ள மாமடு இராணுவ முகாமில் இருந்து காட்டுவழியாக இளமருதங்குளம் ஊடாக சேமமடு 1-ம் யூனிற்றிற்கு இராணுவம் வந்த போது இவர்களை எதிர்த்து விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று மாலை 3 மணி முதல் 7 மணிவரை நடை —04 ஆம் பக்கம் பார்க்க.

# ஊரடங்குச் சட்டம் நீக்கப் பட்டதால் உணவுப்பொருட்கள் விலைவீழ்ச்சி

வடபகுதியில் ஊரடங்குச் சட்டம் கடந்த பத்து நாட்களாக அமுலில் இருந்ததால் குடாநாட்டில் உணவுப் பொருட்கள் மற்றும் சில முக்கிய பொருட்களின் விலை அதிகரித்திருந்தது.

யாழ்ப்பாணப் பகுதிக்கு வரவிருந்த பல லொறிகள் ஊரடங்குச் சட்டத்தால் வவுனியாவுக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் ஆங்காங்கே தரித்து நின்றதும் இந்த விலை அதிகரிப்புக்கு ஒரு காரணமாகும்.

நேற்றுமுதல் ஊரடங்கு நீக்கப்பட்டதையடுத்து இந்த லொறிகள் வரத் தொடங்கியுள்ளதால் உணவுப்பொருட்களின் விலையில் வீழ்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாரம் முதல் விசேட நிவாரணம் சகலருக்கும் வழங்கப்படவிருப்பதால் உணவுப் பொருட்களின் விலையில் மேலும் வீழ்ச்சியடையும் என வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன. (33)

## அவருடைய திற(மை)

மைபோட்டுப்பார்த்து திருடர்களைக் கண்டுபிடிக்க உதவும் ஒருவரே களவு செய்து கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்ட சம்பவம் மறவன்புலோவில் இடம்பெற்றது. கைதடியைச்சேர்ந்த இந்த நபரும் அவருடைய சகாவான பால்கார கணேஷ் என்பவரும் மறவன்புலோவில் உள்ள ஒரு வீட்டில் யாரும் இல்லாத நேரம் நுழைந்து பெறுமதி மிக்க சில பொருட்களை திருடிக்கொண்டு வெளியேறுகையில் எதிர்பாராதவிதமாக அயலவரிடம் மாட்டிக் கொண்டனர். கையும் மெய்யுமாகப் பிடிபட்ட திருடர்களைமக்கள் வெளிச்சத்தில்பார்த்த போது முதலாமவர் திருடர்களைக் கண்டுபிடிக்க மைபோட்டுப் பார்க்கும் யோகரட்ணம் என்று தெரியவந்தது. (71)

## மாங்குளம் காட்டுப் பகுதியில்

# தப்பியோடிய சிப்பாயை மடக்கிப்பிடித்த அருணாசலம் நேற்று ஆஸ்பத்திரியில் மரணம்

மாங்குளம் காட்டுக்குள் சிங்கள சிப்பாயை மடக்கிப் பிடித்த 54 வயது வயோதிபர் பொன்னையா அருணாசலம் நேற்றுக்காலை யாழ் போதனா வைத்தியசாலையில் மரணமானார்.

மாங்குளத்திற்கு அருகில் நவ்வி என்ற காட்டுப்பகுதியில் கடந்த வியாழக்கிழமை மாங்குளம் இராணுவ முகாமிலிருந்துதப்பியோடியசிங்கள சிப்பாய் ஒருவர் இந்த வயோதிபரிடம் வவுனியா செல்ல பாதையைக்காட்டுமாறு கேட்டுவிட்டு பின்னர் இவரைச்சுட முயன்றாராம்.

அச்சமயம் இந்த வயோதிபர் அந்த இராணுவ சிப்பாயை மடக்கிப் பிடித்து அவரிடமிருந்து துப்பாக்கியை பறித்தெடுத்தார். எதுவும் செய்ய முடியாத நிலையில் அந்தச்சிப்பாய் தன்னிடமிருந்த கிரனைட்டை எடுத்து அதன் கிளிப்பை இழுத்தார்.

—04 ஆம் பக்கம் பார்க்க

# முன்னேறும் முயற்சி கட்டுவனில் தோல்வி

நேற்று நண்பகல் 12 30 மணியளவில் கட்டுவன் சந்தியிலிருந்து மல்லாகம் புகையிரத நிலைய வீதியை நோக்கி வெளியேற முயன்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

—04 ஆம் பக்கம் பார்க்க

# காவலூரிலிருந்து ஷெல் தாக்குதல்

காவலூரில் தங்கி இருக்கும் இராணுவத்தினர் அடிக்கடி புளியங்கூடல், நாரந்தனை, கரம்பன் பகுதிகளை நோக்கி இரவு பகலாக ஷெல் தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர்.

இத்தாக்குதலினால் புளியங் கூடலைச் சேர்ந்த நல்லையா (76 அவரது பேரன் பரம்சோதி காண்டீபன்(17) மற்றும் 10 வயதுடைய சிறுமிஆகியோர் கடும் காயங்களுக்குள்ளானார்கள். 19)

## பூநகரியில் கண்டெடுக்கப்பட்டவை

கோண்டாவிலைச் சேர்ந்த கதிர்காமராசா விஜயராஜன் என்பவரின் பாக் ஒன்றும், பளை கிராம சேவையாளர் யோகேந்திரா என்பவரின் பொதி ஒன்றும் கண்டெடுக்கப்பட்டு பூநகரி வி. பு. ம. முன்னணி நிதிப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் வந்து தமது செயலகத்தில் இவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு பூநகரி வி. பு. ம. முன்னணி நிதிப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

## மாவீரர் நினைவாக

மாவீரர் நினைவாக கந்தர்மடம் பகுதியில் ஒன்பது வீதிகளுக்கு மாவீரர்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

கந்தர்மடம் சிற்றூரவையின் ஏற்பாட்டில் நடந்த இந்த வீதிப் பெயர் சூட்டு விழாவில் மாவீரர்களின் பெற்றோர்களும், உறவினர்களும் கலந்து கொண்டனர்.

இங்கு பிறவுண் வீதிக்கு பொன்னம்மான் வீதி எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று தாவடி சிற்றூரவையினால் அப்பகுதியில் ஆறு வீதிகளுக்கு மாவீரர்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. தாவடிப் பிள்ளையார் கோவிலுக்கு முன்னால் இறந்த ஐந்து போராளிகளின் உருவப்படங்கள் அவர்களது பெற்றோர்களால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன. (33)

## அகதிகளுக்கு சங்கம் உதவி

கிழக்கு மாகாண அகதிகளுக்கு வழங்குவதற்காக; அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது ஊழியரின் ஒரு நாள் சம்பளத்தை அவர்களது கார்த்திகை மாதச் சம்பளத்தில் கழித்து வழங்கியுள்ளதாகச் சங்கப் பொது முகாமையாளர் மூ. ஆனந்தகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (ப-24)

## வெடிவிபத்தில் வீர மரணம்

கடந்த 29-ம் திகதி தற்செயலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரமரணம் அடைந்த விடுதலைப்புலிப் போராளி யோசப்(தங்கவேல்) பின் இறுதிக் கிரியைகள் மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தில் இடம் பெற்றன.

இப்போராளியினது பூதவுடல் பான்ட் வாத்தியங்கள் இசைக்க ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்பட்டது. (ப-4)

## பருத்தித்துறையில் மீட்பு நிதி நகைகள் மீளளிப்பு

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து தமிழீழ மீட்புநிதி செலுத்திய பன்னிரெண்டு பேருக்கு மாவீரர் தினத்தன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க நிதிப் பொறுப்பாளர் றஞ்சித் அப்பாவினால் புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட பவுண் திருப்பிக் கையளிக்கப்பட்டன.

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய மண்டபத்தில் இத்தமிழீழ மீட்புநிதி மீளச் செலுத்தல் வைபவம் இடம்பெற்றது. இவ்வைபவத்திற்குசிற்றூரவை உறுப்பினர்.களும் சமுகபளித்திருந்தனர்

இப்பகுதியில் 14 பேருக்கு தமிழீழ மீட்புநிதி மீளச் செலுத்தப்பட இருந்த போதும் இரண்டுபேர் இப்பகுதியில் இல்லாமையினால் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. (15).

## அச்சுவேலியில் அம்புலன்ஸ்கராஜ்

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு அச்சுவேலி ப. நோ. கூ. சங்கம் சுமார் 75, 000 ரூபா செலவில் அம்புலன்ஸ் கராஜ் ஒன்றை நிர்மாணித்து வருகின்றது. (15)


**St. John's College, Jaffna**

**and**

**Chundikuli Girls' College, Jaffna**

**ADMISSION - 1991**

1. Vacancies exist, ONLY in the following Classes:-
   a) Year ONE and Year SIX. (St. John's & Chundikuli Girls' College).
   b) Year TEN. (St John's College ONLY).
2. Applications close on 19th December, 1990.
   i) On forms available from the respective Schools between 5th December and 15th December, 1990.
   ii) Application forms will not be issued under any circumstances after 15 . 12 . 1990.
   iii) Applications on any other forms will NOT be considered
   iv) Forms received after 19thDecember. 1990 will NOTbe considered.
3. Applications must be accompanied by Birth Certificates. Forms incorrectly or incompletely filled will be rejected.
4. Application forms can be obtained from the respective Schools in person, at Rs 50/- per form on School days except Sunday between 9.00 a.m. and 1.00 p. m.
5. AGE LIMITS:-
   i) Year ONE:- Applicants should have been born between 01.02.1985 and 31.01.1986.
   ii) Year SIX:-Applicants should have been born on or after 01.02.1980.
   iii) Year TEN:- Applicants should have been born on or afffer 01.02.1976.
6. Admission Test for Year SIX and TEN:- Saturday the 5th January, 1991, beginning at 8.30 a m.

PRINCIPALS.
JAFFNA.

12001


### நேற்று அதிகாலை சம்பவம்:

# குடாக்கடலில்கடற்படை அட்டகாசம்

# இரு மீனவர் பலி; ஒருவர் படுகாயம்

மண்டைதீவு கடற்பகுதியில் ரோந்து செல்லும் கடற்படையினர் அப்பகுதியில் தொழில் செய்யும் மீனவர்கள் மீது அடிக்கடி தாக்குதல் நிகழ்த்துவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று அதிகாலை மண்டைதீவுக் கடலில் அறக்கொட்டியான் வலை மூலம் மீன் பிடித்துக் கொண்டிருந்த குருநகர் மீனவர்களை நோக்கிக் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இச்சம்பவத்தில் குருநகரைச் சேர்ந்த பிரகாசம் இராசேந்திரம் (62), இராயப்பு பிரான்சிஸ் (48) ஆகிய இரு மீனவர்கள் கொல்லப்பட்டனர். மற்றொரு மீனவரான சவரியான் மரியதாஸ் (35) என்பவர் படுகாயமுற்று யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்ட இரு மீனவர்களினதும் சடலங்கள் கடலிலிருந்து சக மீனவர்களால் மீட்கப்பட்டு நேற்று நண்பகல் யாழ் போதனா வைத்தியசாலை சவச்சாலைக்கு எடுத்துவரப்பட்டன.

இப்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ஏனைய மீனவர்களிடமிருந்து கடற்படையினர் மீன், இறால் என்பவற்றைப் பலவந்தப் படுத்தி அபகரித்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-17, 74)

## உரும்பிராயில் நாளை முதல் இயங்கும்

நாளை திங்கட்கிழமை முதல் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் தற்காலிகமாக இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள் அனைவரையும் காலை 8 மணிக்கு உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கு வரும்படி அதிபர் கேட்டுள்ளார்.

குட்டியப்புலம் அ. த. க. பாடசாலையும் இதனுடன் சேர்ந்து உரும்பிரார்யில்இயங்கவுள்ளது.

## பாண் நிறை மிகக்குறைவு

சாவகச்சேரிப் பகுதியில் பாண் தயாரித்து விநியோகிக்கும் பேக்கரி ஒன்றின் பாணின் நிறை 225 கிராமிலிருந்து 250 கிராம் வரை மிகவும் குறைவாகக் காணப்படுவதாகப் பொதுமக்களும். இப்பாணை விற்பனை செய்யும் கடை உரிமையாளர்களும் தெரிவித்துள்ளனர். (ப-32)


## கண்ணீர் அஞ்சலி

அமரர்

**வேலுப்பிள்ளை நடேசபிள்ளை**

(உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரி - யாழ்ப்பாணம்)

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையிலும் யாழ் மாவட்ட மக்களது உணவுத்தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு; யாழ் மாவட்ட ப. நோ கூ. சங்கங்களுக்கு உணவுப்பொருட்களை பெற்றுக் கொடுப்பதில் தீவிர அக்கறையுடன் செயலாற்றி அமரத்துவமடைந்த அன்னாரது இழப்பு கூட்டுறவு உலகுக்கு மட்டுமல்ல அனைவருக்குமே பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பணிப்பாளர்களும் பணியாளர்களும்,
வலி. கிழ. (வ.ப) ப நோ. கூ. சங்கம்,
அச்சுவேலி.

12021

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் எஸ். ஞானப்பிரகாசம்**

(சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்)

''நாட்டை வளம்படுத்தும் கூட்டுறவை பலப்படுத்த
தன்வீட்டையும் மறந்து நாட்டமுடன் செயற்பட்டு
கூட்டுறவில் நம்தேவை எதுவான போதினிலும்
நல்லமனதுடனே நாட்டமுடன் செயற்பட்டீர்.

சிக்கனமாய் மக்கள் சிறப்புடனே வாழ என
''சிக்கன கடனுதவுச் சங்க மொன்றை'' ஆரம்பிக்க
உற்றதோர் துணை நின்று உழைத்த உத்தமரே
உம்பிரிவு கேட்டு மட்டற்ற கவலை கொண்டோம்.

காலன் உம்மைக் கவர்ந்தது கேட்டு கலங்கினோம்,
துடித்தோம்.
கவலையிலாழ்ந்திருக்கும் அமரரின் குடும்பத்தவர்க்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

உமது இறப்பு ''எமக்கு ஓர் இழப்பு''
ஆனால் கூட்டுறவுக்கோ ''பேரிழப்பு''

வலி-கிழ (வ.ப)ப.நோ.கூ.சங்கம், அச்சுவேலி.
பணிப்பாளர்களும், பணியாளர்களும்.

12023



## சிறு விளம்பரம்

### வகுப்புக்கள்

விஞ்ஞான வகுப்புக்கள் B. M. C. முன் லேன், யாழ்ப்பாணம். A/L 92, 91&90 வகுப்புகள் வழமையான ஆசிரியர் குழுவுடன், தூய, பிரயோக கணித பிரபல ஆசிரியரும் இணைந்து கொள்கிறார். ஆரம்பம் 01-12-90 Sat. 7.30 a m
12002

### விற்பனைக்கு

நுளம்பை விரட்ட நீம் தூபம், எண்ணெய் ஸ்நானத்திற்கு ஒலிவ் ஸ்நானப் பவுடர். மில்க்வைற் தயாரிப்புகள் இணுவில், திருநெல்வேலி, யாழ் ஆஸ்பத்திரிவீதி அண்ணா கோப்பி கடைகளிலும் விற்பனைக்கு உண்டு. மில்க்வைற் - யாழ்ப்பாணம்
12018

### சேவை

மரம் நடுவீர், மழை பெறுவீர். வாகை,மருது கன்றுகள் தேவைப்படும் தேவாலயங்கள், வாசிகசாலைகள் மற்றும் நிறுவனங்கள் எழுத்து மூலம் விண்ணப்பத்துடன் வந்து பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற் - யாழ்ப்பாணம்.
12019

### சேவை

மீண்டும் யாழ் நகரில் தரமான போட்டோஸ்ரற், றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள் 'ஸ்கைலைன்ஸ்' 281B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். காலை 9 00 மணி முதல் மாலை 2 00மணிவரை Skylines, 281B, Clock Tower Road Jaffna (ஏஜென்சி தபாற் கந்தோர் அருகாமை)
12007

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) 'மண்டேலா ரேடர்' இல 256 A,பருத்தித்துறை வீதி, நல்லூர். 'அரஸ் ஜவுளியகம்' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
12024

### விற்பனைக்கு

சிறந்த இன விளாத்தியில் ஒட்டிய தோடங் கன்றுகள் விற்பனைக்கு உண்டு. ஒரு வருடத்தில் பலன் தரக்கூடியவை. தொடர்பு பொ. துரை ஐயா, நிலாவிரைபடி, நவற்கிரி, புத்தூர் அல்லது இங்கிலிஸ் பார்மசி, உரும்பிராய்.
12025

### விற்பனைக்கு

தூய்மையான மாட்டு இறைச்சி வகைகளை பெறச் சிறந்த இடம் இல.7, துண்டி வீதி, கொழும்புத்துறை. உரிமையாளர்: ஆர் யே. எஸ். வெள்ளி விடுமுறை
12028

தமிழக முதல்வர் சொல்கிறார்

# எலியாக வாழ்வதிலும் புலியாக இறப்பதே மேல்

"தனிப்பட்ட குரோதங்களை, அரசியல் கருத்து வேறுபாடுகளை மனதில் கொள்ளாது மத்திய அரசு செயற்படுவதே உண்மையான ஜனநாயகமாகும்" என்று தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி மத்திய அரசின் செயற்பாடு குறித்து கருத்து வெளியிடுகையில் தெரிவித்துள்ளார்.

"எலியாக உயிர் வாழ்வதைவிடப் புலியாகச் சாவதே மேல் என்று எண்ணுகிறவன் நான்" என்றும் கலைஞர் குறிப்பிட்டார்.

"தனிமனிதர்கள் வீழ்த்தப்படலாம். ஆனால் எய்திட வேண்டுமென்று எண்ணிய இலட்சியங்கள் வீழ்த்தப்படுவதில்லை. இன்று வீழ்ந்தது போலத் தோற்றமளிக்கலாம். நாளை அந்த இலட்சியங்கள் விஸ்வரூபம் எடுத்து வெற்றி முரசு கொட்டலாம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவதானமாக இருங்கள்

## குடாநாட்டில் கண்நோய் வெகு வேகமாகப் பரவுகிறது

தற்போது யாழ் குடாநாட்டில் பரவலாகக் கண்நோய் பரவி வருகிறது. வலி. தெற்குப் பகுதியில் அநேகமான மக்கள் கண் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இக்கண் நோய்க்குக் காலநிலைதான் முக்கிய காரணமென வைத்திய. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடும் வெப்பமும் குளிரும் மாறி மாறி அமைந்ததாகத் தற்போதைய காலநிலை காணப்படுவதால் அதுவே கண் நோயைத் தோற்றுவித்துள்ளதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-2)

## 36,888 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி

ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் 42 மாணவர்கள் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்தி (ஏ) பெற்றுள்ளனர்.

இப்பரீட்சைக்கு ஒரு லட்சத்துத்தொள்ளாயிரம் பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

இவர்களுள் 36,888 பேர் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறும் தகுதி பெற்றுள்ளனர்.

இந்த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் கடந்த வாரம் வெளியாகியிருந்தன.

வடக்கில் உயர்தரப் பரீட்சை இம்முறை நடைபெறவில்லை என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்ய தகுதி பெற்றுள்ள 36,888 மாணவர்களில் 6,000 பேர் தமிழ் மொழி மூல மாணவர்களாவர்.

### முரசொலிக்கு வந்த கடிதம்

## கிழக்கின் கண்ணீர்க் கதை

ஆசிரியர்,
முரசொலி.

கிழக்கு மாகாண மக்களின் அவலங்கள்பற்றி தங்கள் பத்திரிகையில் வரும் செய்திகளைப் பார்த்துக் கவலைப் பட்டுக் கொண்டிருக்கையில், எனக்கு ஓர் அதிர்ச்சி தரும் கடிதம் கிடைத்திருக்கிறது. அதை முழுமையாகத் தருகின்றேன்.

"நாங்கள் அகதிகளாகி மட்டக்களப்பு ஊறணியில் இருந்தோம். கடந்த 9 9.1990 இல் அங்கு வந்த 'ஸ்ரீலங்கா கொமாண்டோஸ்' எங்கள் உற்றார் உறவினரைக் கடத்திச் சென்று விட்டனர். என் தங்கை அம்பிகா, தம்பி ஞானேஸ், மச்சான் மோகன், பேபியின் மகன் பாபு, பூசாரியார் குடும்பம் ஆகியோர் இதில் அடங்குவர்

அம்பிகா 25,000/ பெறுமதியான தங்க நகைகளுடன் கடத்தப்பட்டார். எல்லாம் இழந்து தனிமரமாகத் தவிக்கிறேன். என் வீடு, மாடு கன்றுகள் யாவும் போய்விட்டன. என்துயரை யார் துடைப்பார்?

— கோ. சந்திரசேகரம்

(தகவல்:- மறவன்புலோ பெ. விநாயகமூர்த்தி)


"புகைவண்டியில்
மூன்றாம் வகுப்பில்
பயணம் செய்யும்
யாழ்ப்பாணத்தான்
காசு கொடுத்து
விமானம் ஏறுவானா?"

— போக்குவரத்து அமைச்சர்

விபரம் அறிய வாசியுங்கள்
க. இராசதுரை எழுதும்
'பலாலி தளமான கதை'
விரைவில் முரசொலி வழங்குகிறது


## நல்லூரில் இரசிகமணி நினைவு விழா

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் ஆதரவில் இரசிகமணி கனக செந்திநாதனின் 13 - வது நினைவு தினம் 9-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

வடமாநில சித்திர வித்தியாதிகாரி கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் ஆ மகாலிங்கம் தொடக்கவுரை நிகழ்த்துவார்.

திரு சொக்கன் ஆசிரியர் 'கிராமிய வாழ்க்கை நெறிகள் கலைமரபுகளோடு இணைந்த இரசிகமணி' என்னும் தலைப்பில் உரை நிகழ்த்துவார்.

## விசேட ஆணையாளர் நியமனம்

பருத்தித்துறை பிரதேச சபையின் விசேட ஆணையாளராக பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் எம். தம்பிப்பிள்ளை உள்ளூராட்சித் திணைக்களத்தால நியமிக்கப்பட்டுப் பொறுப்பேற்றுள்ளார். (15)

## வகுப்புகள் ஆரம்பம்

இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் யாழ் தொழில் நுட்பக் கல்லூரி பகுதிநேரவகுப்புகளும் நாளை திங்கள் முதல் பகல் நேர (முழுநேர) வகுப்புகளும் வழமைபோல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-7)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தினால் விருந்தினர் விடுதியாகப் பயன்படுத்துவதற்கான

## வீடொன்றைக் குத்தகைக்குப் பெறுதல்

விருந்தினர் விடுதியாகப் பயன்படுத்துவதற்காக மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு வீடொன்று கிளிநொச்சியில் தேவைப்படுகின்றது. குத்தகைக்குக் கொடுக்கப்படவுள்ள வீடு பின்வரும் தேவைகளைத் திருப்திப்படுத்தல் வேண்டும்.

1. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடம் அமைந்திருக்கும் இரணைமடுச் சந்தியிலிருந்து ஒரு கிலோ மீற்றர் சுற்று வட்டாரத்துள் அமைந்திருத்தல் வேண்டும்.
2. தளப்பரப்பு 150 சதுரமீற்றர்களுக்குக் குறைவாக இருத்தலாகாது.
3. குறந்த பட்சம் மூன்று படுக்கை அறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. வீட்டின் முன்பக்கம் வாகனங்கள் தங்கி நிற்குமிட வசதி, பூந்தோட்ட இடவசதி உடையனவாய் இருத்தல் வேண்டும்.
5. கிணறு, மின்சாரம், குழாய்நீர் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. குத்தகைக் காலத்தின்போது சிறிய திருத்தங்களைச் செய்வதற்கான உரிமையைப் பல்கலைக் கழகம் கொண்டிருத்தல் வேண்டும்.

வீட்டைக் குத்தகைக்கு விட விரும்புவோர் செலுத்த வேண்டிய குத்தகைப் பணத்தின் அளவைக் கடிதத்தில் குறிப்பிட்டு 1990 12. 14 ஆம் தேதிக்கு முன்னர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வீட்டைக் குத்தகைக்குவிடல்' என எழுதப்படல் வேண்டும்.

யாழ் பல்கலைக்கழகம், பதிவாளர்
இலங்கை.
1990. 11. 28 12004

## பாணின் விலையை நிர்ணயிக்க விசேட கூட்டம்

யாழ் மாவட்டத்தில் நிறை குறைவான பாண் விற்பனை செய்யப்படுவதையும், பாணின் விலை இடத்துக்கிடம் வித்தியாசமாக இருப்பதையும் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

இதன்பொருட்டு ஆராய்ந்து முடிவெடுக்கவென யாழ் மாவட்ட பேக்கறி உரிமையாளர்களின் கூட்டமொன்று 3-ம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள பிறிமியர் பேக்கறியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் பாண் உற்பத்தியை நிறுத்தி இக்கூட்டத்தில் பேக்கறி உரிமையாளர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு பேக்கறி உரிமையாளர்கள் சங்க செயலாளர் கேட்டுள்ளார்.

## பெண் குழந்தை பரிசு பெற்றது

கைதடி ஆயுர்வேத போதனா வைத்தியசாலையில் கடந்த 14-ம்திகதி திறந்து வைக்கப்பட்ட மகப்பேற்று விடுதியில் 30 - ம் திகதி வரை 5 பிரசவங்கள் நடைபெற்றுள்ளன.

முதலாவதாக பிறந்தபெண் குழந்தைக்கு மட்டுவிலைச் சேர்ந்த டாக்டர் பிலிப் முன்னர் அறிவித்தபடி 1000 ரூபாவை பரிசாக கொடுத்ததுடன் பிரசவம் பார்த்த தாதிக்கும் பரிசிலை வழங்கியுள்ளார் என மகப்பேற்று விடுதியின் வைத்திய ஆலோசகர் டாக்டர் திருமதி ஜி. பவானி தெரிவித்தார்.

## புங்குடுதீவுக்கு மூன்றாமிடம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 23 ப. நோ. கூ. சங்கங்களுக்கிடையே தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வையொட்டி கூட்டுறவாளர்களால் நடத்தப்பட்ட சிறந்த சங்கங்களுக்குரிய போட்டியில் புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கம் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இதற்கான பரிசிலையும் சான்றிதழையும் கோண்டாவில் மாதிரி செயலகத்தில் நடைபெற்ற பொது முகாமையாளர்கள் மகாநாட்டில் சங்கத்தின் சார்பில் கணக்காளர் சி. முத்துவேலு பெற்றுக் கொண்டார்.

முதலாம் இடத்தை தெல்லிப்பளை சங்கமும் இரண்டாம் இடத்தை நீர்வேலி சங்கமும் பெற்றது குறிப்பிடத் தக்கது. (19, 20)

## பட்டப்பகலில் திருட்டு முயற்சி

கோப்பாய் மத்தி முத்துமாரியம்மன் தேவஸ்தான உண்டியலை பட்டப்பகல் வேளையில் உடைத்துத் திருடிய திருடர்கள் ஆலயப் பூசகரிடமும் அயலவர்களிடமும் கையும் மெய்யுமாக மாட்டிக் கொண்டனர்.

இவர்களில் ஒருவர் உள்ளூர் தொடர்புடையவர்என்பதும், மாட்டிக் கொண்டவர் வெளியூரவர் என்பதும் விசாரணையின் மூலம் அறியவருகின்றது. சம்பவம் நடைபெற்ற வேளையில் உள்ளூர் தொடர்புடையவர் தப்பி ஓடிவிட்டார். மற்றவர் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டார். இப்பகுதியில் ஏற்கனவே நடைபெற்ற சிறுதிருட்டுச் சம்பவங்களுக்கும் இவருக்கும் தொடர்பிருக்கலாம் என மக்கள் சந்தேகப்படுகின்றனர்.

### அதிகாரிகளின் அசிரத்தை

# வயாவிளான், பலாலி மக்கள் நிவாரணம் ஏதுமின்றி அவதி

கடந்த நான்கு வருடங்களாக இராணுவ நடவடிக்கையால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பலாலி, வயாவிளான் மக்கள் அதிகாரிகளின் அசிரத்தையினால் துயரத்திலிருந்து மீள வழியின்றி தவிக்கின்றனர்,

1986 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையும் ஸ்ரீ லங்கா இராணுவத்தினதும், இந்திய இராணுவத்தினதும் தொடர்ச்சியான தாக்குதல் நடவடிக்கையினால், இருப்பிடங்களை இழந்தும், தொழில்கள் பாதிப்படைந்தும் அகதி நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இந்திய இராணுவம் வெளியேறியதைத் தொடர்ந்து யாழ் மாவட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட சகல நிவாரணங்களிலும் உண்மையாகப் பாதிப்படைந்த பலாலி-வயாவிளான் மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகப் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அரசினால் வழங்கப்பட்ட வீட்டு நிவாரணம் பதினையாயிரம் ரூபா, மீளக் குடியமர்தலுக்கான இரண்டாயிரம் ரூபா, தொழில் பாதிப்புக்கான நாலாயிரம் ரூபா என்பன மிகச்சிலரைத் தவிர பலருக்கு இன்னும் வழங்கப்படவில்லை

விவசாயம், மீன்பிடி போன்ற தொழில் முற்றாகப் பாதிப்படைந்த இப் பகுதி மக்களுக்கு சரியானமுறையில் அதற்கான நிவாரணம் வழங்கப்படாத அதே நேரம் இதே உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள இளவாலைப் பகுதியில் சுமார் ஆயிரம் பேருக்கு மேல் நாலாயிரம் ரூபா நிவாரணம் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக பலாலி வடமேற்கு, பலாலி மேற்கு பலாலி தெற்கு, பலாலி வடக்கு, பலாலி கிழக்கு, மயிலிட்டிக்கரை கிராம மக்களே இதனால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்துள்ள இப் பகுதி மக்கள் அரசாங்கத்தால் தற்போது வழங்கப்படும் நாலாம் கட்ட நிவாரணம் பெற முடியாத துர்ப்பாக்கிய நிலையையும் அடைந்துள்ளனர்.

சுமார் முந்நூறுக்கு மேற்பட்ட குடும்பத்தினருக்கு இன்னும் புதிய குடும்ப அட்டை வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

### யாழ் போதனா வைத்தியசாலையில்

## சேதம் 10 மில்லியன் என மதிப்பு திருத்த ஒரு மில்லியனே அனுமதி

கடந்த ஜூன் மாதத்திற்குப் பின்னர் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் யாழ் போதனா வைத்தியசாலைக்கு 10 மில்லியன் ரூபா சேதமேற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

10 மில்லியன் ரூபா சேதம் என மதிப்பிடப்பட்டுள்ள போதிலும் அதனைத்திருத்தி மீள இயங்க வைப்பதற்கென சுகாதார அமைச்சு ஒரு மில்லியன் ரூபாவை மட்டுமே வழங்கியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதே சமயம் யாழ் கோட்டைக்கு அருகில் நவீன ஆஸ்பத்திரி ஒன்றைக் கட்டப் போவதாகவும், தற்போதைய ஆஸ்பத்திரிக் கட்டடத்தை வேறு பாவனைக்கு பயன்படுத்தப் போவதாகவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (74)

## சாம்பல்தீவு சுற்றிவளைப்பு

திருமலை மாவட்டத்தில் உள்ள சாம்பல்தீவு இராணுவ முகாமில் இருந்து வந்த இராணுவத்தினர் 2 பஸ்களில் பொதுமக்களை ஏற்றி திருமலை நகருக்கு கொண்டு சென்றுள்ளது.

நேற்று முன்தினம் காலை 7மணிமுதல் 12 மணிவரை பொதுமக்களைத் தேடுதல் நடாத்திக் கைது செய்துள்ளனர். இவர்களிற்கு என்ன நடந்தது என்பது பற்றி எதுவும் தெரியவில்லை. (71)

## பாதிக்கப்பட்டவர்களுக்கு வை. எம். சீ. ஏ. நிவாரணம்

குருநகர்ப் பகுதியில் இராணுவ நடவடிக்கை காரணமாக பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த, உடைமைகளை இழந்த மக்களுக்கு வை எம். சி. ஏ. நிவாரணம் வழங்கியுள்ளது.

'இவ்வாறு பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 300 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களை வை. எம். சி. ஏ பிரதான கட்டிடத்தில் வைத்து நேற்று வழங்கியுள்ளது. (71, 74)

### வீர மரணம்

மாவிட்டபுரத்தில் முன்னேற முயன்ற இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் யோகா (தம்பித்துரைச்சாமி சிதாலட்சுமி மயிலிட்டி) வீரமரணத்தை தழுவிக் கொண்டார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

### யாழ் பல்கலைக்கழகத்தில் உள்ள

## கிழக்கு மாகாண மாணவர்கள் உதவி பெறமுடியாது அவலம்

யாழ் பல்கலைக்கழகத்தில் கல்விபயிலும் கிழக்குமாகாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

தற்போதையநிலை காரணமாக தமது பெற்றோருடன் தொடர்பு கொள்ளவோ அவர்களிடம் இருந்து பண உதவி பெறவோ முடியாத நிலையில் இவர்கள் உள்ளனர்.

தற்பொழுது சுமார் 200 கிழக்கு மாகாணமாணவர்கள் யாழ் நகரில் தங்கியுள்ளனர். இவர்களில் அநேகமானோர் உணவுக்குக் கூட போதிய வசதியின்றியும் அதேவேளை எவரிடமும் நேரடியாக உதவி கோரமுடியாத நிலையிலும் இருப்பதாகவும் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசு சார்பற்ற நிறுவனங்களின் உதவியை இந்த மாணவர்கள் எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (74)

## விதவைகள், அனாதைகளுக்கு ஒய்வூதியம் கிடைக்கவில்லை

தென்மராட்சிப் பகுதியிலுள்ள தபாற்கந்தோர்களினால் வழங்கப்படும் விதவைகள், அனாதைகள் ஒய்வூதியப் பணம் கடந்த யூன் மாதம் முதல் வழங்கப்படாதுள்ளது.

இப்பகுதியிலுள்ள விதவைகள், அனாதைகள் தற்போது ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையால். மிகவும் கஷ்டத்திற்குள்ளாகிக் கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

யாழ்மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிற்கு இப்பணம் வழங்கப்பட்டுவிட்டது எனவும், தென்மராட்சிப்பகுதிக்கு கொடுக்கப்படுவதற்கு சம்பந்தப்பட்டவர்களின் முயற்சியின்மையே காரணம் எனவும் தென்மராட்சி தபாலக ஊழியர் தெரிவித்தார். (71)

## கார்த்திகைத் தீப விளக்கீடு

கார்த்திகைத்தீபத்திருநாள் இம் முறை ஆலயங்களிலும், இல்லங்களிலும் ஒரே நாளில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

வாசல்கள் தோறும் தீப அலங்காரங்கள் அழகாகக் காட்சி தந்தன. சிப்பி, சுட்டி விளக்குகள் மதில்களையும் மாடங்களையும் அலங்கரித்தன.

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரியம்பாள் ஆலயத்தில் ஆயிரம் விளக்குப் பூசை நடைபெற்றது.

குடாநாடு முழுவதும் வழமைபோல சொக்கப்பனை கொளுத்தப்பட்டது.

(48, 33, பl, 12)

### விஜயலக்சுமி பண்டிற் நேற்றுக் காலமானார்

இந்தியாவின் பிரசித்தி பெற்ற ராஜதந்திரியும், நேரு குடும்பத்தில் உயிர்வாழ்ந்து வந்தஎஞ்சிய உறுப்பினர்களில் வயதில் மிக மூத்தவருமான திருமதி விஜயலக்சுமி பண்டிற் நேற்று 90-வது வயதில் காலமானார்.

ஐக்கிய நாடுகள் சபையின் முதற் பெண் தலைவராகப் பதவி வகித்த பெருமையைப் பெற்றுள்ளவிஜயலக்சுமி பண்டிற் இந்தியாவிலிருந்து ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்ற குழுக்களுக்குப் பல தடவைகள் தலைமை தாங்கியுமுள்ளார்.

ரஷ்யா, அமெரிக்கா, ஸ்பெயின், பிரிட்டன் உள்ளிட்ட பல நாடுகளில் இந்திய தூதுவராகப் பணிபுரிந்த இவர் 21 டாக்டர் பட்டங்களையும் பெற்றுள்ளார்.

சில வருடங்களுக்கு முன்னர் தனது சகோதரனின் மகளானகாலஞ்சென்ற இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு எதிராகப் பல சூடான அறிக்கைசள் விட்டதன் மூலம் சர்ச்சைக்குரியவராகவும் இவர் கருதப்பட்டவர்.

### நாளை முதல் நடைபெறும்

## இழந்த நாட்களை ஈடுசெய்ய பாடசாலைகளில் விசேட போதனை

நாளை திங்கட்கிழமை முதல் யாழ் மாவட்டப் பாடசாலைகள் அனைத்திலும் பாடபோதனைகள் இடம்பெறும் என யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இழந்த பாடசாலை நாட்களை ஈடு செய்யும் வகையில் இந்தப் பாட போதனைகள் இடம்பெறும்.

அகதிகள் உள்ள பாடசாலைகளில் அகதிகளை பாடசாலையைவிட்டு வெளியேற்றாது வேறு கட்டிடங்களில் வகுப்புக்களை நடாத்த ஏற்பாடு செய்யுமாறும், இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் அவர்களது பாடசாலை மாணவர்கள் இடம் பெயர்ந்துள்ள பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்பிக்கச் செல்லுமாறும் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார் (74)

### தப்பியோடிய...

உடனே கிரனைட் வெடித்து சிப்பாய் ஸ்தலத்தில் மரணமானார். அவரைப் பிடித்திருந்த அருணாசலம் படுகாயமுற்ற நிலையில் நேற்று முன்தினம் இரவு யாழ் போதனாவைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு பின் நேற்றுக்காலை மரணமானார். (74)

### செயலகத்தில்—

இக் கூட்டத்தில் சகல உதவி அரசாங்க அதிபர்களையும் சமுகமளிக்குமாறு யாழ் அரச அதிபர் திரு அன்ரன் அல்பிறட் அறிவித்துள்ளார். (66

### மயானமாக ..

வெடி ஆகியவற்றை அகற்றும் பணியில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர். முகாமுக்கு அருகில் உள்ள ஆலயங்களும் சேதமடைந்துள்ளன. இராணுவம் இங்கு நிலைகொண்டிருந்ததால் கண்டி வீதி போக்குவரத்துக்கு முற்றாக மூடப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (38)

### முன்னேறும் ..

இதனைத்தொடர்ந்து பலத்த ஷெல் தாக்குதலும் ஹெலித்தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. மீண்டும் மாலை 4 45 மணியளவிலும் கடும் மோதல் இடம்பெற்றது. (48)

### தவறணை ...

என்பவரே மரணமானவர்.

தியாகராசா (35) வட்டக்கச்சி, கணபதிப்பிள்ளை(68) இராமநாதபுரம், பரமநாதன் (36) இராமநாதபுரம், விஜயரட்ணம் கிளிநொச்சி ஆகியோர் காயமடைந்துள்ளனர். (74)

## காலமானார்

### செல்வன் ஈஸ்வரானந்தன் விக்கினராஜா

நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட இவர் ஈஸ்வரானந்தன, பிரியதர்சினி ஆகியோரின் அருமை மகனும், தயாளினி, மகிந்தன், மகேந்திரன், ஜனகன் ஆகியோரின அன்புச் சகோதரனும், திரு. திருமதி நாகேஸ்வரன், புஸ்பமலர் ஆகியோரின பெறாமகனும், காயத்திரி,காந்தீபன் ஆகியோர்ரின் சகோதரனும், திரு. திருமதி நகுலேஸ்வரி பாலேந்திராவின் மருமகனும், இளங்கோ, சேரன் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 30-11 90 அன்று பூநகரி செட்டியகுறிச்சியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சம்பந்தர் ஈஸ்வரானந்தன் குடும்பம்

No.15, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர். 12030

## சீனப்பிரதமர் டிசம்பர் 17-ல் கொழும்பு வருகிறார்

சீனப்பிரதமர் மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு 17 ஆம் திகதி கொழும்பு வருகிறார். இவருடன் நாற்பது அதிகாரிகள் குழுவொன்றும் வருகிறது. இவர்களில் ஒருவர் சீனாவின் பொதுமக்களிற்கான பாதுகாப்பு அதிகாரி என்பது குறிப்பிடத்தக்கது.

சீனப்பிரதமர், பிரதமர் விஜேதுங்கவின் அழைப்பின் பேரிலேயே இங்கு வருவதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் இவரது விஜயத்திற்கான நோக்கம் ஏதும் அறிவிக்கப்படவில்லை.

### சேமமடுவில்—

பெற்ற சண்டையில் இராணுவத்தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டது. சேதவிபரம் தெரியவரவில்லை, ஆயினும் இரண்டு தடவை ஹெலி அப்பகுதியில் இறங்கிச்சென்றதில் இருந்து பலர் காயமடைந்தும், பலியாகியும் இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித இழப்பும் ஏற்படவில்லை. இம்மோதலில் இராணுவம் முன்னேற முடியாது விடுதலைப் புலிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தினர். இராணுவத்தினர் சேமமடுவில் தரித்து நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (71)

இப் பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 02-12-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.